06.08.2025

O.S.No. 239/2021

DW2– சுப்பையா – த/பெ. சக்திவேல்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.08.2025

குறுக்கு விசாரணை : ( வாதி / தரப்பில்)

1. பிரதிவாதி எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். வாதி முருகன் எனது ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். வாதி முருகன் 10 ஆண்டுகளாக எங்கள் ஊரில் குடியிருந்து வருகிறார்.

2. வழக்கு சொத்தின் விவரம் எனக்கு தெரியும். வாதி தான் வாங்கிய இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். சர்வே எண்.161/10 சுப்பிரமணியனுக்கும், சின்னம்மாள் வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. வாதி முருகன் 20 ஆண்டுகளுக்கு முன்பே ஆஸ்பெஸ்டாஸ் சீட் அமைத்து தபசில் இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தபசில் வீட்டை தவிர வாதிக்கு வேறு எந்த வீடும் இல்லை என்றால் சரியல்ல. கோவிலுக்கு வடக்கே வாதிக்கு மற்றொரு வீடு இருக்கிறது என நான் கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

4. நிரூபண வாக்குமூலம் பத்தி 3 ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. நான் பொய்யாக வாதி 3 செண்ட் இடத்தை வாங்கி அனுபத்தில் இருந்துவருகிறார் என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி நிலம் வாதியின் மனைவி கணபதியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வாதியும், அவரது மனைவியும் தபசில் வீட்டில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மாட்டுச்சாவடியாக தான அனுபவித்து வருகிறார்கள். சாட்சி முதலில் மாட்டுச்சாவடி கட்டி 7 ஆண்டுகள் என சொல்லிவிட்டு தற்போது 3 ஆண்டு என கூறினார். மாட்டுச்சாவடி அமைக்கும்போது பிரதிவாதி எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் மாட்டுச்சாவடி அவரது இடத்தில்தான் இருந்தது. அளவீடு செய்யும்போதுதான் தெரிந்தது. 5 வருடங்களுக்கு முன்பு பிரதிவாதி அவருடைய இடத்தை அளவீடு செய்யும்போது வாதியின் ஆக்கிரமிப்பு செய்தது தெரியவந்தது. பிரதிவாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி சொன்னதின் அடிப்படையில்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.